| H.M.O.P.No. 112/2023 | PW1: திருமதி. சித்ரா<br>த/பெ. திரு. குப்பன் | 14-02-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. 08-06-2017-ல் திருவலம் J.B.M. திருமண மண்டபத்தில் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்தது. எதிர்மனுதாரரின் அம்மாவின் தம்பி மகள்தான் நான். எதிர்மனுதாரரின் சம்மதத்தோடுதான் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு நான் எதிர்மனுதாரர் வீட்டில்தான் குடும்பம் நடத்தி வந்தேன். எதிர்மனுதாரர் வீட்டில் வசித்தபோது ஒரு பெண், ஒரு ஆண் குழந்தை பிறந்தது, எங்களுக்கு மொத்தம் 3 குழந்தைகள். மகள் பெயர் தர்ஷா, மகன் பெயர் ஹேம்நாத் ஆகும்.

2. மேற்படி இரண்டு குழந்தைகளும் உடல் குறைபாடுடைய குழந்தைகளாகத்தான் பிறந்தது. மேற்படி இரண்டு குழந்தைகளுக்கும் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை பார்த்து வந்தோம். எதிர்மனுதாரர் அவ்வாறு சிகிச்சை நடந்தபோது உடன் இல்லை என்று மனுவிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது குழந்தைகளை சென்னை எழும்பூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தபோது எதிர்மனுதாரர் பண உதவி செய்து உடனிருந்து குழந்தைகளை பார்த்து வந்தார் என்று சொன்னால் இல்லை.

3. இரண்டு குழந்தைகளும் உடல் குறைபாடுடைய குழந்தைகளாக பிறந்ததால் எதிர்மனுதாரர் என்னை அடிக்கடி அதனை சொல்லி கொடுமைப்படுத்தி வந்தார் என்று மனுவிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடிக்கடி என் தகப்பனார், சகோதரருடன் சந்தேகப்பட்டு பேசவில்லை என்றாலும், நான் மனுவிற்காக

அவ்வாறு பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல, கடந்த 7 ஆண்டுளாக எதிர்மனுதாரர் அவ்வாறுதான் பேசிவந்தார். மேற்படி விஷயத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளீர்களா என்றால் சந்தேகப்படுகிறார் என்ற விஷயத்தை சொல்லியுள்ளேன். என் அத்தை, மாமாவிடம் சொல்லியும் அவர்கள் எதிர்மனுதாரரை கண்டிக்கவில்லை என்று மனுவில் சொல்லியுள்ளது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல.

4. 6 வருடமாக எதிர்மனுதாரர் கொடுமை செய்தது சம்மந்தமாக செய்யாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்திலோ அல்லது பெங்களூரில் உள்ள மகளிர் காவல் நிலையத்திலோ புகார் எதுவும் கொடுத்தீர்களா என்றால் இல்லை.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**